ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2343/28 - 2023 අගෝස්තු මස 02 වැනි බදාදා - 2023.08.02

*2343/28 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

***84 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்***

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அனைத்து நீர் வழங்கல் திட்டங்களின் ஊடாகவும் நீர் விநியோகிக்கப்படும் நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து 2023, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் பின்வருமாறு கட்டணம் அறவிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல் திட்டங்களினூடாக நீர் விநியோகிக்கப்படுகின்ற பாவனையாளர்கள் சம்பந்தமாக2022, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர்க் கட்டண அறவீடு தொடர்பாக 2294/51 ஆம் இலக்க மற்றும் 2022, ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அறிவித்தலுக்குப் பதிலாக இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

**ஜீவன் தொண்டமான்,**
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,
பத்தரமுல்லை,
*2023, யூலை 31.*

எந்தவொரு வளாகமாயினும் குறித்த வளாகத்துக்குரிய மாதாந்த நீர்க் கட்டணத்துடன் பாவனைக் கட்டணம், மாதாந்த சேவைக் கட்டணம், ஏனைய கட்டணங்கள் மற்றும் உரிய வரித் தொகைகள் உள்ளடக்கப்படும். நீர்ப்பட்டியலில் பொதுவாக மொத்த மாதாந்தக் கட்டணம் சுட்டிக் காட்டப்படுவதுடன், பாவனையாளரொருவருக்கு தனது நீர்ப்பட்டியலுக்கு மேலதிகமாக பெறுமதி சேர் வரி/இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (VAT/SVAT) விலைப்பட்டியல் (Invoice) ஒன்று தேவைப்படுமிடத்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் முன் பதிவினை மேற்கொள்வதன் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பின்வரும் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு சபையின் அனைத்து நீர்ப் பாவனையாளர்களும் தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளனர். இதன் மூலம் உரிய நீர்க் கட்டண விதிப்பு முறையை மிக இலகுவாக கண்டறிய முடியும்.

**குறிப்பு**: ஒரு நீர் அலகு ஒரு கனமீற்றர் (1,000 லீற்றர்) என வரைவிலக்கணப்படுத்தப்படல் வேண்டும்.

| *பாவனையாளர் தொகுதிகள்* | *உரிய வளாக வகை* | *பாவனையாளர் வகுதி இலக்கம் மற்றும் வகுதிகள்* | *உரிய நீர்க் கட்டண விதிப்பு முறை* |
|---|---|---|---|
| வீட்டுப் பாவனை - சமுர்த்தி பெறுநர்கள் மற்றும் தோட்டக் குடியிருப்பாளர்கள் | சமுர்த்தி பெறுநர்கள் மற்றும் தோட்டக் குடியிருப்புக்களில் வசிக்கும் குடும்பங்களின் வீட்டுத் தேவைகளுக்காக நீர் வழங்குதல் | ➢ 14-தோட்ட குடியிருப்பு (சமுர்த்தி பெறுநர்களல்லாத)<br>➢ 17-நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தில்லாத குடியிருப்புக்களைக் கொண்ட கூட்டுரிமை வீடுகள்<br>➢ 20-வீடு சமுர்த்தி பெறுநர்கள்<br>➢ 24-தோட்டக் குடியிருப்பு சமுர்த்தி பெறுநர்கள் | கட்டண விதிப்பு அட்டவணை 01 |
| வீட்டுப் பாவனை - சமுர்த்தி பெறுநர்கள் மற்றும் தோட்டக் குடியிருப்பாளர்கள் அல்லாத | சமுர்த்தி பெறுநர்கள் மற்றும் தோட்டக் குடியிருப்பாளர்கள் அல்லாத ஏனையோரின் வீட்டுத் தேவைகளுக்காக நீர் வழங்குதல் | ➢ 10-வீடு<br>➢ 11-சபையின் உத்தியோகபூர்வ விடுதிகள்<br>➢ 13-அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள்<br>➢ 16-சபையின் உத்தியோகபூர்வ விடுதிகள் (அபதலை)<br>➢ 18-கூட்டுரிமை வீடுகள்<br>➢ 19-தூதரக குடியிருப்பு - பெறுமதி சேர் வரி அறவிடப்படாத | கட்டண விதிப்பு அட்டவணை 02 |
| பொது நீர்க் குழாய்கள் | குழாய்கள் மற்றும் பூங்கா நீர்க் குழாய்கள் மூலமாக பொது இடங்களுக்கு நீர் வழங்குதல் | ➢ 51-பொது நீர்க் குழாய்கள்<br>➢ 52-பூங்கா நீர்க் குழாய்கள்<br>➢ 53-பொது நீர்க் குழாய்கள் (பாவனையாளர் சங்கம்) | கட்டண விதிப்பு அட்டவணை 03 |
| பாடசாலைகள், மத வழிபாட்டுத் தளங்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தர்ம ஸ்தாபனங்கள் ஏனைய இலாபம் ஈட்டாத நிறுவனங்கள் | அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரச உதவிபெறும் பாடசாலைகள், மத வழிபாட்டுத்தளங்கள் மற்றும் புனித ஸ்தானங்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய இலாபம் ஈட்டாத நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு நீர் வழங்குதல் | ➢ 12-அரசாங்க பாடசாலைகள்<br>➢ 15-அரச உதவிபெறும் பாடசாலைகள்<br>➢ 81-மத வழிபாட்டுத்தளங்கள், புனித ஸ்தானங்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தர்ம ஸ்தாபனங்கள்<br>➢ 85-ஏனைய இலாபம் ஈட்டாத நிறுவனங்கள் | கட்டண விதிப்பு அட்டவணை 04 |
| அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு வலய கைத்தொழில்கள் தவிர்ந்த ஏனைய கைத்தொழில்கள் | அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு வலய கைத்தொழில்கள் தவிர்ந்த ஏனைய கைத்தொழில்களின் நிமித்தம் நீர் வழங்குதல் | ➢ 60-அரச நிறுவனங்கள்<br>➢ 61-இராணுவ வளாகங்கள்<br>➢ 62-பொலிஸ் திணைக்களத்திற்குரிய வளாகங்கள்<br>➢ 64-உள்ளூராட்சி நிறுவனத்திற்கு உரிய வளாகங்கள்<br>➢ 73-சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் அல்லாத கைத்தொழில்கள்<br>➢ 75-சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் | கட்டண விதிப்பு அட்டவணை 05 |

| பாவனையாளர் தொகுதிகள் | உரிய வளாக வகை | பாவனையாளர் வகுதி இலக்கம் மற்றும் வகுதிகள் | உரிய நீர்க் கட்டண விதிப்பு முறை |
|---|---|---|---|
| அரசாங்க வைத்தியசாலைகள் | அரசாங்க வைத்தியசாலைகளுக்கு நீர் வழங்குதல் | ➢ 63-அரசாங்க வைத்தியசாலைகள் | கட்டண விதிப்பு அட்டவணை 06 |
| வணிக நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயக் கைத்தொழில்கள் | அரச தொழில் முயற்சி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், உல்லாசப் பயணிகள் ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள், முதலீட்டு ஊக்குவிப்பு வலயக் கைத்தொழில்கள், கூட்டிணைந்த அபிவிருத்திகள், தூதுவர் அலுவலகம், பெறுமதிசேர் வரி அறவிடப்படாத வணிக நிறுவனங்கள், பிற வணிக மற்றும் தனியார் நிறுவனங்கள், சபை வளாகங்கள், பவுசர்களுக்காக நீர் விநியோகித்தல் | ➢ 65-அரச தொழில் முயற்சி நிறுவனங்கள்<br>➢ 70-வணிக நிறுவனங்கள்<br>➢ 71-உல்லாசப் பயணிகள் ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள்<br>➢ 74-முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்<br>➢ 77-கூட்டிணைந்த அபிவிருத்திகள்<br>➢ 79-தூதுவர் அலுவலகம் பெறுமதி சேர் வரி அறவிடப்படாத வணிக நிறுவனங்கள்<br>➢ 80- பிற வணிக மற்றும் தனியார் நிறுவனங்கள்<br>➢ 82-சபை வளாகங்கள்<br>➢ 98-பவுசர்களுக்காக நீர் விநியோகித்தல். | கட்டண விதிப்பு அட்டவணை 07 |
| துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து | துறைமுகங்களுக்கு வருகின்ற கப்பல்களின் பொருட்டு நீர் வழங்குதல் மற்றும் துறைமுக நகரம் | ➢ 72-கப்பல் போக்குவரத்துச் சேவைகள்<br>➢ 78-துறைமுக நகரம் | கட்டண விதிப்பு அட்டவணை 08 |
| மொத்தமாக நீர் வழங்குதல் | உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலானஅமைப்புக்களின் பொருட்டு மொத்தமாக நீர் வழங்குதல் | ➢ 90-உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மொத்தமாக நீர் வழங்குதல்<br>➢ 91-சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு மொத்தமாக நீர் வழங்குதல் | கட்டண விதிப்பு அட்டவணை 09 |

**நானாவித கட்டண விதிப்பு முறைகளுக்கான நீர்க்கட்டண அட்டவணை**

**கட்டண விதிப்பு அட்டவணை - 01 (வகுதி இலக்கங்கள் 14, 17, 20, 24)**

**வீட்டுப் பாவனை - சமுர்த்தி பெறுநர்கள் மற்றும் தோட்டக் குடியிருப்பாளர்கள்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 05 | 05.00 | 100.00 |
| 06 - 10 | 10.00 | 100.00 |
| 11 - 15 | 15.00 | 100.00 |
| 16 - 20 | 40.00 | 100.00 |
| 21 - 25 | 58.00 | 100.00 |
| 26 - 30 | 88.00 | 200.00 |
| 31 - 40 | 105.00 | 400.00 |
| 41 - 50 | 120.00 | 650.00 |
| 51- 75 | 130.00 | 1,000.00 |
| 75 இற்கு மேல் | 140.00 | 1,600.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 02 (வகுதி இலக்கங்கள் 10, 11, 13, 16, 18, 19)**

**வீட்டுப் பாவனை - சமுர்த்தி பெறுநர்கள் மற்றும் தோட்டக் குடியிருப்புகள் அல்லாத**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 05 | 60.00 | 300.00 |
| 06 - 10 | 80.00 | 300.00 |
| 11 - 15 | 100.00 | 300.00 |
| 16 - 20 | 110.00 | 400.00 |
| 21 - 25 | 130.00 | 500.00 |
| 26 - 30 | 160.00 | 600.00 |
| 31 - 40 | 180.00 | 1,500.00 |
| 41 - 50 | 210.00 | 3,000.00 |
| 51 - 75 | 240.00 | 3,500.00 |
| 76 - 100 | 270.00 | 4,000.00 |
| 100 இற்கு மேல் | 300.00 | 4,500.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 03 (வகுதி இலக்கங்கள் 51, 52, 53)**

**பொது நீர்க் குழாய்கள், பூங்கா நீர்க் குழாய்கள் மற்றும் பொது நீர்க் குழாய்கள் (பாவனையாளர் சங்கம்)**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 25 | 60.00 | 400.00 |
| 26 - 50 | 60.00 | 500.00 |
| 51 - 100 | 60.00 | 1,000.00 |
| 101 - 200 | 60.00 | 1,600.00 |
| 200 இற்கு மேல் | 60.00 | 2,500.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 04 (வகுதி இலக்கங்கள் 12, 15, 81, 85)**

**அரசாங்க பாடசாலைகள், அரசாங்க உதவி பெறும் பாடசாலைகள், மத வழிபாட்டுத் தளங்கள் மற்றும் அரசாங்க அனுமதிபெற்ற தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய இலாபம் ஈட்டாத நிறுவனங்கள்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 05 | 60.00 | 400.00 |
| 06 - 10 | 60.00 | 400.00 |
| 11 - 15 | 60.00 | 500.00 |
| 16 - 20 | 60.00 | 600.00 |
| 21 - 25 | 60.00 | 1,000.00 |
| 26 - 30 | 60.00 | 1,200.00 |
| 31 - 40 | 60.00 | 1,200.00 |
| 41 - 50 | 60.00 | 2,400.00 |
| 51 - 75 | 60.00 | 2,400.00 |
| 75 இற்கு மேல் | 60.00 | 3,500.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 05 (வகுதி இலக்கங்கள் 60, 61, 62, 64, 73, 75)**

**அரசாங்க நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயக் கைத்தொழில் தவிர்ந்த ஏனைய கைத்தொழில்கள்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 25 | 110.00 | 500.00 |
| 26 - 50 | 110.00 | 750.00 |
| 51 - 75 | 110.00 | 1,500.00 |
| 76 - 100 | 110.00 | 1,750.00 |
| 101 - 200 | 110.00 | 2,000.00 |
| 201 - 500 | 110.00 | 3,000.00 |
| 501 - 1,000 | 110.00 | 5,000.00 |
| 1,001 - 2,000 | 110.00 | 10,000.00 |
| 2,001 - 4,000 | 110.00 | 15,000.00 |
| 4,001 - 10,000 | 110.00 | 30,000.00 |
| 10,001 - 20,000 | 110.00 | 60.000.00 |
| 20,000 இற்கு மேல் | 110.00 | 130,000.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 06 (வகுதி இலக்கம் 63)**

**அரசாங்க வைத்தியசாலைகள்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 25 | 100.00 | 400.00 |
| 26 - 50 | 100.00 | 500.00 |
| 51 - 75 | 100.00 | 1,000.00 |
| 76 - 100 | 100.00 | 1,000.00 |
| 101 - 200 | 100.00 | 1,600.00 |
| 201 - 500 | 100.00 | 2,500.00 |
| 501 - 1,000 | 100.00 | 4,000.00 |
| 1,001 - 2,000 | 100.00 | 7,500.00 |
| 2,001 - 4,000 | 100.00 | 12,500.00 |
| 4,001 - 10,000 | 100.00 | 25,000.00 |
| 10,001 - 20,000 | 100.00 | 50.000.00 |
| 20,000 இற்கு மேல் | 100.00 | 100,000.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 07 (வகுதி இலக்கங்கள் 65, 70, 71, 74, 77, 79, 80, 82, 98)**

**வணிக நோக்கத்துடன் இயங்குகின்ற நிறுவனங்கள், அரச தொழில் முயற்சி நிறுவனங்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள், முதலீட்டு ஊக்குவிப்பு வலயக் கைத்தொழில்கள், கூட்டிணைந்த அபிவிருத்திகள், பிற வணிக மற்றம் தனியார் நிறுவனங்கள், தூதரக குடியிருப்புகள் - பெறுமதி சேர் வரி அறவிடப்படாத வணிக நிறுவனங்கள், சபை வளாகங்களுக்கு நீர் வழங்குதல் மற்றும் பவுசர்களுக்காக நீர் விநியோகித்தல்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 25 | 150.00 | 500.00 |
| 26 - 50 | 150.00 | 750.00 |
| 51 - 75 | 150.00 | 1,500.00 |
| 76 - 100 | 150.00 | 1,750.00 |
| 101 - 200 | 150.00 | 2,000.00 |
| 201 - 500 | 150.00 | 3,000.00 |
| 501 - 1,000 | 150.00 | 5,000.00 |
| 1,001 - 2,000 | 150.00 | 10,000.00 |
| 2,001 - 4,000 | 150.00 | 15,000.00 |
| 4,001 - 10,000 | 150.00 | 30,000.00 |
| 10,001 - 20,000 | 150.00 | 60,000.00 |
| 20,000 இற்கு மேல் | 150.00 | 130,000.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 08 (வகுதி இலக்கங்கள் 72, 78)**

**கப்பல் சேவைகள் மற்றும் துறைமுக நகரம்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 25 | 750.00 | 500.00 |
| 26 - 50 | 750.00 | 750.00 |
| 51 - 75 | 750.00 | 1,500.00 |
| 76 - 100 | 750.00 | 1,750.00 |
| 101 - 200 | 750.00 | 2,000.00 |
| 201 - 500 | 750.00 | 3,000.00 |
| 501 - 1,000 | 750.00 | 5,000.00 |
| 1,001 - 2,000 | 750.00 | 10,000.00 |
| 2,001 - 4,000 | 750.00 | 15,000.00 |
| 4,001 - 10,000 | 750.00 | 30,000.00 |
| 10,001 - 20,000 | 750.00 | 60,000.00 |
| 20,000 இற்கு மேல் | 750.00 | 130,000.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை - 09 (வகுதி இலக்கங்கள் 90, 91)**

**மொத்தமாக நீர் வழங்குதல்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ஒரு அலகு | ரூபா |
| 00 - 25 | 60.00 | 500.00 |
| 26 - 50 | 60.00 | 750.00 |
| 51 - 75 | 60.00 | 1,500.00 |
| 76 - 100 | 60.00 | 1,750.00 |
| 101 - 200 | 60.00 | 2,000.00 |
| 201 - 500 | 60.00 | 3,000.00 |
| 501 - 1,000 | 60.00 | 5,000.00 |
| 1,001 - 2,000 | 60.00 | 10,000.00 |
| 2,001 - 4,000 | 60.00 | 15,000.00 |
| 4,001 - 10,000 | 60.00 | 30,000.00 |
| 10,001 - 20,000 | 60.00 | 60,000.00 |
| 20,000 இற்கு மேல் | 60.00 | 130,000.00 |

__நானாவிதக் கட்டணங்களும் நிபந்தனைகளும்:__

1. புதிய சேவை இணைப்புகள்
புதிய சேவை இணைப்பொன்றினை வழங்குவதற்கான செலவானது பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படும்.

2. ஏதாவது குறிப்பிட்ட மாதத்தில் நீரை பயன்படுத்தாத பாவனையாளர்களுக்கு குறைந்த மாதாந்த சேவைக் கட்டணம் மற்றும் பெறுமதி சேர் வரி ஆகியவை அறவிடப்படும்.

3. குறைபாடுள்ள நீர்மானிகள்
நீர்மானியொன்று பழுதடைந்துள்ள போது அல்லது பழுதுபார்ப்பதற்கு அல்லது அளவுத் திருத்தத்தின் நிமித்தம் நீர்மானி அகற்றப்படுமிடத்து, நீர்மானி இல்லாத காலத்தினுள் பயன்படுத்தப்பட்ட நீர்ப் பாவனையானது, நீர்மானி அகற்றப்பட்டதற்கு அல்லது பழுது ஏற்படுவதற்கு முன்னதான கிட்டிய மாதம் தவிர்ந்த தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்ட மூன்று நீர்மானி வாசிப்புகளிடையே பெறப்பட்ட சராசரி நாளாந்த பாவனை வீதத்திற்கு ஏற்ப நீர்க்கட்டணம் கணிக்கப்படும்.

4. பாவனையாளர்களின் கோரிக்கைகளின் பிரகாரம் நீர்மானியைப் பரீட்சித்தல்:
பாவனையாளர்களின் நீர்மானியை அவர்களது கோரிக்கையின் பிரகாரம் பரீட்சிப்பதற்கான கட்டணமானது மானியைப் பரீட்சிப்பதற்கு செலவாகும் செலவின் அடிப்படையில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும். மானியை பரீட்சிக்குமிடத்து உண்மையான நீர்ப் பாவனையை விட 02% வீதத்தினால் அதிகரித்த/குறைவான மானி வாசிப்பு பதிவாகியுள்ளதாக கண்டறியப்படுமிடத்து குறித்த கட்டணமானது திரும்ப செலுத்தப்படுவதுடன், பாவனையாளரின் முறைப்பாட்டுத் திகதியை கருத்தில்கொண்டு நீர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

5. உடனடியாக செய்யப்படும் கொடுப்பனவிற்கான ஊக்குவிப்பு:

நீர்ப்பட்டியல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 14 வேலை நாட்களுக்குள் நீர்க்கட்டணத்தை செலுத்துகின்ற பாவனையாளர்களுக்கு நீர்ப்பட்டியலின் பெறுமதியில் 1.5% வீதமான (அல்லதுதேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரினால் அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படும்) கழிவு வழங்கப்படும்.

6. தாமதக் கொடுப்பனவிற்கான மேலதிகக் கட்டணம்:

பாவனையாளர்கள் தமது பட்டியலுக்குரிய நீர்க்கட்டணத்தை 14 நாட்களினுள் செலுத்துதல் வேண்டும். நீர்ப்பட்டியல் வழங்கப்பட்ட திகதி முதல் 30 நாட்களுக்குள் பாவனையாளர் தமது பட்டியல் தொகையைச் செலுத்தத் தவறுவாராயின், நீர்ப்பட்டியல் வழங்கப்பட்ட திகதி முதல் நிலுவையாகவுள்ள தொகையின் நிமித்தம் மாதமொன்றிற்கு 2.5% ஆன (அல்லது அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படும்) மேலதிகக் கட்டணம் அறவிடப்படும்.

7. சேவை இணைப்பைத் துண்டித்தல்:

30 நாட்களுக்கு மேலாக நீர்ப்பட்டியலுக்குரிய கட்டணத் தொகையானது நிலுவையாகக் காணப்படுமிடத்து பாவனையாளரின் சேவை இணைப்பை துண்டிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளருக்கு அதிகாரம் உண்டு.

8. மீள் சேவை இணைப்புக் கட்டணம்:

சேவை இணைப்பைத் துண்டித்ததன் பின்னர் மீண்டும் நீர் இணைப்பை வழங்குவதற்கான கட்டணமானது, அவ்வாறு மீண்டும் நீர் இணைப்பினை வழங்குவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகையின் அடிப்படையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரால் தீர்மானிக்கப்படும்.

9. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பவுசர் நீர்க்கட்டணத்தினுள் போக்குவரத்து மற்றும் ஏனைய பொதுவான செயற்பாட்டு செலவினங்கள் உள்வாங்கப்பட வில்லை. அத்துடன் கட்டண விதிப்பு - 09 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக் கட்டணமும் பவுசர் மூலமான நீர் விநியோகத்திற்கு உரித்துடையதாகாது.

10. ஈ - பில் சேவையின் பொருட்டு பதிவு செய்யாத பாவனையாளரினால் "சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி" இன் நிமித்தம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் பணத்தொகையை மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.

11. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள யாராவதொரு அதிகாரி/ஊழியரொருவர் வீட்டுக்கு சமூகமளித்து நீர்ப்பட்டியலுக்குரிய கட்டணங்களை சேகரிப்பதாயின் அதன் நிமித்தம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வசதிகளை வழங்குவதற்கான கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.

12. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அவ்வாறான பிற அரச நிறுவனங்களினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டமொன்றில் குடியிருப்பவர்களுக்கு நீர் வழங்குகின்ற நடவடிக்கையினை மேற்கொள்ளுமிடத்து இரட்டை இணைவுள்ள உந்தி தொகுதிக்கு உரியதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் தற்போது செலவிடப்படும் மின்சார பட்டியலுக்குரிய கட்டணம் மற்றும் ஏனைய அனைத்துச் செலவினங்களையும் குறித்த வீடமைப்புத் திட்டத்தின் குடியிருப்பாளர்களினால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு நீர்க்கட்டணத்திற்கு மேலதிகமாக முழுமையாகச் செலுத்துதல் வேண்டும்.

13. ஒழுங்குவிதிகளை மீறுதல்:

நீர் இணைப்பு வழங்கப்படுவது சில கட்டணங்களுக்கு ஏற்பவாகும். குறித்த கட்டளைகளை யாராவதொரு பாவனையாளர் மீறுவாராயின் 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தினதும், 1992 ஆம் ஆண்டின் 13 இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் உரிய ஏற்பாடுகளின் கீழ் அல்லது இச்சட்டங்களின் ஏனைய தொடர்புடைய திருத்தங்களினதும் ஏற்பாடுகளினதும் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

EOG 08-0021

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.